திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதகிரீஸ்வரர் மலைக்குச் செல்ல இழுவை ரயில் அமைப்பது சம்பந்தமாக இந்தக் கேள்வியில் மலைக்கு போகிறவர்களைச் சுமந்து செல்வதற்கு ஏற்பாடு உண்டு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் மனிதர்கள் ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழ்ந்துக் கொண்டிருக்கிற காலத்தில் மனிதனை மனிதன் சுமந்துச் செல்லக் கூடிய இந்த முறையை இந்த அரசு அனுமதித்துக் கொண்டிருக்கிறதா? அதைத் தடை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே மனிதர்களை மனிதர்கள் சுமந்து கொண்டிருப்பதை நாம் நாடு முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இதை அரசு தடை செய்யமுடியாது. மனிதர்களாகவே முன் வந்து அதைச் செய்தால்தான் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் கோவிலிலே அந்தக் கழுகுகள் வருவதையொட்டித்தான் அந்த ஆலயத்திற்கே பெருமை. ஆனால் அவ்வாறு இழுவை ரயில் போடுவதன் மூலம் அங்கேயிருக்கிற சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்பட்டு, அந்தக் கழுகுகள் அங்கே வராமல் போய்விடக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது என்றுதான் பல நாள் பரிசீலனை செய்து அதை அங்கே நிறுத்தியிருக்கிறார்கள். எனவே, அதைத் தொடராமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இங்கே மதிப்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்களுடைய கருத்தையும் ஏற்று, இப்படிப்பட்ட திட்டம் அங்கே செயல் படுத்த முடியாத நிலையிலே இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட. ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி.

24—(*வினா எண் 24) திரு. பெ.சு. திருவேங்கடம் : மற்றும் திரு.கே பிச்சாண்டி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை

1989 ஏப்ரல் 4]

(முற்பகல் 9-10)

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் தஞ்சையை விட அதிகமான அளவிலே கிணற்று பாசனத்தைப் பயன்படுத்தி முப்போகம் நெல்லை விளைவித்து, ஏறத்தாழ தமிழகத்தினுடைய அரிசி தேவையைப் பெரும்பாலும் பூர்த்தி செய்கிற ஒரு மாவட்டமாக விளங்கி வருகிறது. ஆனாலும் இருந்த அரசுகள் ஏற்கெனவே அங்கே கல்லூரியை ஆரம்பிப்பதற்காகக் கூட இடம் எல்லாம் பார்த்தார்கள். அது அதே நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்தினுடைய முக்கிய நலன் கருதி மாவட்டத்திலே ஒருவேளாண்மைக் கல்லூரியை எதிர்காலத்திலே ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்விப்பட்ட வரையில் வட ஆற்காடு மாவட்டத்தில் வேளாண் குடியைச் சேர்ந்தவர்கள், நல்ல சிறப்பு பயிற்சி பெற்று திறமையாக சாகுபடி செய்து உற்பத்தியை அதிகரிக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இதைவிட பின்தங்கிய மாவட்டங்கள் இருக்கின்றன. இப்போது இருக்கின்ற நிதி நிலைமையையொட்டி அங்கு தற்சமயம் அப்படிப்பட்ட கல்லூரி திறப்பதற்கில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சிறந்த முறையில் பயிற்சி பெற்று அதிகமான உணவு உற்பத்தியைச் செய்கிறோம் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டுகிறார்கள். நன்றி. ஆனால், சிறப்பான முறையில் விவசாயத்தைச் செய்கின்ற அந்த மக்களை மேலும் ஊக்குவிக்க அந்தக் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் வேளாண்மைத் துறையிலே படித்து பட்டம் பெற தொழிலிலேயும், கல்வியிலேயும் பிற்பட்ட மாவட்டமாக இருந்து வருகின்ற அந்த நிலைமையைப் போக்க எதிர்காலத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள்—ஏற்கெனவே இடம் எல்லாம் பார்க்கப்பட்டது, நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு தெரிந்து இருக்குமோ, தெரியாதோ எனக்குத் தெரியாது—அந்த முயற்சியை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி நிதி ஓரளவிற்கு பெருகிய பிறகு பரிசீலிக்கலாம்.

திரு. கே. பிச்சாண்டி : தலைவர் அவர்களே, திருவண்ணாமலைப் பகுதி சாத்தூர் அணை பாசன வாய்க்கால்களும் அது மட்டுமல்லாமல் செங்கத்திலே மைய அரசின் ஆயிரக் கணக்கான ஏக்கரிலே விவசாயப் பண்ணைகளும் இருக்கின்ற பகுதியாகவும், விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக்கொண்ட பகுதியாகவும் இருப்பதால் அங்கே வேளாண்மைக் கல்லூரி துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே: அந்த மாவட்டத்திலே விவசாயக் கல்லூரி துவங்கக்கூடாது என்று அரசினுடைய கொள்கை இல்லை. ஆனாலும் நிதி நெருக்கடியைப் பொறுத்தவரையில் அத்தியாவசியமான நேரங்களில், அத்தியாவசியமான மாவட்டங்களில் திறப்பதைப்பற்றி அப்போது ஆராயலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பி. துரைசாமி (பேரவைத் துணைத்தலைவர் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் நாமக்கல்லில் கால்நடை மருத்துவக்கல்லூரி இருக்கிறது. கால்நடை மருத்துவக் கல்லூரியையொட்டி கால்நடை மருத்துவப்பல்கலைக் கழகமும், ஆராய்ச்சி மையமும் நடைபெறும் என்று முந்தைய அரசு ஆணை பிறப்பித்து, இன்றைக்கு கல்லூரி மட்டும் இயங்கிக் கொண்டிருக்கிறது. கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னைக்கு மாற்றப்படுவதாக அறிந்த கல்லூரி மாணவர்கள் மிகவும் பதட்டம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். அது போன்ற உத்தேசம் உண்டா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, பிரத்யேகக் கேள்வி போடவும்.

திரு. செ. நூர்முகமது : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மை முக்கியமானத் தொழிலாக நடந்து வருகிறது. பெரிய தொழிற்சாலைகளோ, அல்லது தொழிற் கல்வி நிறுவனங்களோ அங்கு இல்லை. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். எல்லா மாவட்டத்திலும் இயங்குவதில் அரசுக்கு எந்தவித தயக்கமும் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட பொருளாதார நிலையின் காரணத்தினாலும், இன்னும் சில நெருக்கடி காரணத்தினாலும் அவற்றை தற்போது புதியதாக ஏற்படுத்துவதற்கில்லை.

திரு. கே. சுந்தர் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, எந்தெந்த இடத்திலே எவ்வளவு வேளாண்மைக் கல்லூரிகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்திலே

ஏரி மாவட்டம் என்று அழைக்கப்படுகின்ற செங்கை அண்ணா மாவட்டத்திலும் ஒரு கல்லூரியை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்டு தற்போது வேளாண்மைக் கல்லூரிகள் கோயம் புத்தூர், மதுரை, சிதம்பரனார் மாவட்டத்தில் கிள்ளிக்குளம் ஆகிய 3 இடங்களில் இயங்கி வருகின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தனியாக ஒன்று இயங்கி வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, வேளாண்மைக் கல்லூரி தஞ்சையில் அல்லது ஆடுதுறையில் அமைப்பதற்கு எல்லா வகையான வேலைகளும் முடிந்த நிலையில் தற்போது தஞ்சையிலோ ஆடுதுறையிலோ வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கான திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே இருக்கின்ற விவசாயக் கல்லூரியினுடைய ஒரு பிரிவை இராமநாதபுரம், பசும்பொன், காமராஜர் மாவட்டம் போன்ற பின்தங்கிய மாவட்டங்களுக்கு அந்தக் கல்லூரியிலிருந்து துணைப் பண்ணை ஏதாவது நிறுவுவதற்கு அரசாங்கத்திடம் உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியை ஏற்படுத்த இப்போது செயற்குறிப்பு இல்லை என்று வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வடாற்காடு மாவட்டம் போளூர் பகுதியில் கஸ்தம்பாடி அருகில் அதனுடைய கிளை ஏற்படுத்துவதற்கு முன்பு அதிகாரிகள் எல்லாம் வந்து பார்த்தார்கள். வேளாண்மைக் கல்லூரி இல்லாவிட்டாலும், வேளாண்மைப் பண்ணையை அங்கே கன்னிகாபுரம் என்ற கிராமத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : கேள்வி கல்லூரியைப் பற்றியது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.